# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்

கொழும்பு 07.


2016.09.22

தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : **07/2016**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

## அரசாங்க விடுமுறை தினங்களில் மற்றும் வார இறுதி நாட்களில் சேவையாற்றுவதற்காக நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு செலுத்துதல்

முறையே, 1997.04.01 மற்றும் 1993.06.21 ஆம் திகதிய 707 மற்றும் 575 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கைகள் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

"அரசாங்க விடுமுறை தினங்களில் மற்றும் வார இறுதி நாட்களில் சேவையாற்றுவதற்காகச் செலுத்துதல்" தொடர்பான 2013.10.09 ஆம் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை பல்கலைக்கழக முறைமையில் பணியாற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும் ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 707 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் 2 (அ) பந்தி கீழே குறிப்பிடப்படும் பிரகாரம் திருத்தியமைக்கப்படுகின்றது.

(அ) உத்தியோகத்தர் ஒரு நாளில் எட்டு (08) மணித்தியாலத்திற்கு குறையாத நேரம் பணியாற்றல் வேண்டும்.

(ஆ) ஒரு மாதத்தில் உச்சளவு இரண்டு (02) தினங்கள் குறிப்பிட்ட திணைக்களத் தலைவரின் முன் அனுமதியின் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு மற்றும் அதற்கமைய குறிப்பிட்ட செலுத்துகைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

(இ) ஒரு மாதத்தில் இரண்டு (02) தினங்களைப் பார்க்கிலும் அதிகளவு தினங்கள் சேவையில் ஈடுபடுத்துவதற்கான தேவையேற்படின் குறிப்பிட்ட நிரல் அமைச்சின் (Line Ministry) செயலாளரின் முன் அனுமதியை தனிப்பட்ட வகையில் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதுடன் அதற்கமைய செலுத்துகைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை தின சம்பளம் செலுத்துவதற்காக குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகம் / நிறுவகத்திற்கு வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்படும் நிதி ஏற்பாட்டு வரையறைக்குள் இந்தச் செலவை முகாமைப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

இந்த ஏற்பாடுகள் 2016.09.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும். 707 மற்றும் 575 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கைகளின் ஏனைய ஏற்பாடுகள் மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்களுக்குட்பட்ட வகையில் மாற்றங்களின்றி தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/2/8